மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, விவரம் சொல்வதற்கு முதலமைச்சர் ஏன் வரவில்லை என்று அக்கறை காட்டி எதிர்க்கட்சித் தலைவர் கேட்டதற்கு நன்றி தெரிவித்து, உடல் நலம் இல்லாத காரணத்தால் வரவில்லை என்ற செய்தியை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. அறிவிப்புகள்.

அ. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு, தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதிகளின் 6 (1) வது விதியின்கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:—

1. திரு. பி. எச். பாண்டியன்
2. திரு. கு. வடிவேல்
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
4. திரு. பொ. விஜயராகவன்

ஆ. அலுவல் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் 193(1)-வது விதியின் கீழ், கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1979–80-ம் ஆண்டுக்கு அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்:—

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்
2. மாண்புமிகு முதல் அமைச்சர்
3. மாண்புமிகு பேரவை முன்னவர்
4. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்

1979 அக்டோபர் 27]

5. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
6. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
7. திரு. துரை கோவிந்தராசன்
8. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
9. திரு. ஏ. ஆர். மாரிமுத்து
10. திரு. என். சங்கரய்யா
11. திரு. ஜே. ஜேம்ஸ்
12. திரு. சோ. அழகர்சாமி
13. திரு. ரா. மார்க்கபந்து
14. திரு. கே. கந்தசாமி
15. திரு. சேலம் மு. ஆறுமுகம்
16. திரு. எம். ஏ. லத்தீப்

அலுவல் காரணமாகப் பேரவைத் தலைவர் இக் குழுவின் தலைவர் ஆவார்.

(3) அரசினர் சட்ட முன் வடிவுகள்.

அ. சென்னை மாநகரகாவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ''1979ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவை'' பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவுக்கு ஏற்கெனவே திருத்தம் இருந்தது, அமெண்ட்மெண்ட் கூட கொண்டு வரப் பட்டிருக்கிறது. இரண்டையும் சேர்த்து கொண்டு வந்திருக்கலாம். எதற்காக தனித் தனியாக கொண்டு வர வேண்டும் என்று தெரியவில்லை. அதற்கு அடுத்து, கல்கத்தா, பாம்பே போன்ற இடங்களில் இருப்பது போல பெனால்டி 75 ரூபாய்க்கு போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். 20 ரூ. என்று அது இருந்தது....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இந்த மசோதா பற்றி விவாதம் வரும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் தங்களது கருத்தை தாராளமாக எடுத்துச் சொல்லலாம். இப்பொழுது அறிமுகப்படுத்தும் நிலையில் குறுக்கீடு செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.....

திரு. க. சுப்பு : இது குறுக்கீடு அல்ல, என்னுடைய கருத்தையும் சொல்ல அனுமதிக்க வேண்டும்......